# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,605 — 1958 නොවැම්බර් 29 වැනි සෙනසුරාද — 29.11.1958

11,605 ம் இலக்கம்— 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை இலக்கம் 106

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (i) ம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் டொன் பிலிப் றூபசிங்க குணவர்தன, விவசாய உணவு அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் எத்தொகையான எவ்வித நெல்லையும் அனுராதபுர மாவட்டத்திலிருந்து உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக, அல்லது அம்மாவட்டத்தின் உப உணவுக் கட்டுப் பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் வழங்கப்படும் உத்தரவின் பேரில் தவிர கொண்டு செல்லவோ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாது எனத் தடை விதிக்கிறேன்.

இக்கட்டளையின் பொருட்டு " மாவட்டம் " என்பது அரசாங்க மாகாண அதிபரின் இறைவரிப் பரவையைச் சேர்ந்த இடமாகும்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ந் திகதி.

டி. பீ. ஆர். குணவர்தன,
விவசாய உணவு அமைச்சர்.

---

### 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளத்தீர்ப்புச் சங்கச் சட்டம்

#### அறிவித்தல்

1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளத்தீர்ப்புச் சங்கச் சட்டத்தின் 28 ம் பிரிவின் பிரகாரம், கட்டடத் தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள் தொழில், வீடமைப்பு, சமூகசேவை மந்திரியால் அங்கீகரிக்கப்பட்டு விட்டனவென்று 1943 ம் ஆண்டின் 40 ம் இல. சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட அச்சட்டத்தின் 27 (3) ம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாந் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ந் தேதி.

ஆர். எம். ஜி. மணிப்பெனி,
தொழில், வீடமைப்பு, சமூகசேவை
மந்திரிகாரியாலய நிரந்தரக்காரியதரிசி.

#### அட்டவணை

கட்டடத்தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்தால் ஆக்கப்பட்டு 1950 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 25 ந் தேதி வெளிவந்த 10,141 ம் இல. அரசாங்க " கசெற் "றில் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டு, 1951 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 10,229 ம் இல. விசேட அரசாங்க கசெற்றிலும், 1953 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் தேதி வெளிவந்த 10,542 ம் இல. விசேட அரசாங்க கசெற்றிலும், 1955 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21 ந் தேதி வெளிவந்த 10,850 ம் இல. அரசாங்க கசெற்றிலும், 1958 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 11,306 ம் இல. விசேட அரசாங்க கசெற்றிலும் பிரசுரமான அறிவித்தல்களிற் குறிக்கப்பட்டவாறு மாற்றப்பட்ட தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ம் பாகத்தில் மேலும் பின்வருமாறு மாற்றப்படுகின்றன :—

(1) " யாதாயினுமொரு மாதத்தில் சாதாரண வேலைநாளுக்குரிய விசேட சகாயப்பண வீதம் " என்ற தலைப்பின் கீழ்—

(i) (அ) என்ற உபதலைப்பின் கீழ் உள்ள பாகத்தில்—

(அ) " 1.63 " என்ற எண்களுக்குப் பதிலாக " 2.00 " என்ற எண்களை இட்டும் ;

(ஆ) " 1.73 " என்ற எண்களுக்குப் பதிலாக " 2.10 " என்ற எண்களை இட்டும் ;

(ii) (ஆ) என்ற உபதலைப்பின் கீழ் உள்ள பாகத்தில்—

(அ) " 1.60 " என்ற எண்களுக்குப் பதிலாக " 1.97 " என்ற எண்களை இட்டும் ;

(ஆ) " 1.70 " என்ற எண்களுக்குப் பதிலாக " 2.07 " என்ற எண்களை இட்டும் ;

(2) அப்பாகத்தின் 3 (இ) ம் பத்தியிற் குறிக்கப்பட்ட கட்டளைகளை இயைபு படுத்திக் காட்டும் சூசிகளுக்குப் பதிலாகப் பின்வரும் சூசிகளை இட்டும் :—

"I ம் சூசி

வாழ்க்கைச் செலவுப்புள்ளி அதிகரிப்பின் கொடுபட வேண்டிய விசேட சகாயப்பணம்

| வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் | தேர்ச்சியற்ற தொழிலாளர் | தேர்ச்சியற்ற தொழிலாளர் அல்லாத ஏனைய வேலையாளர் |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| 100·1—101·8 .. .. | 2 00 .. | 2 10 |
| 101·9—103·6 .. .. | 2 03 .. | 2 13 |
| 103·7—105·4 .. .. | 2 06 .. | 2 16 |
| 105·5—107·2 .. .. | 2 09 .. | 2 19 |
| 107·3—109·0 .. .. | 2 12 .. | 2 22 |

II ம் சூசி

வாழ்க்கைச் செலவுப்புள்ளி குறையின் கொடுபட வேண்டிய விசேட சகாயப்பணம்

| வாழ்க்கைச் செலவுப்புள்ளிகள் | தேர்ச்சியற்ற தொழிலாளர் | தேர்ச்சியற்ற தொழிலாளர் அல்லாத ஏனைய வேலையாளர் |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| 100·0—98·3 .. .. | 1 97 .. | 2 07 |
| 98·2—96·5 .. .. | 1 94 .. | 2 04 |
| 96·4—94·7 .. .. | 1 91 .. | 2 01 |
| 94 6—92·9 .. .. | 1 88 .. | 1 98 |
| 92·8—91·1 .. .. | 1 85 .. | 1 95 |

---

## 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளத்தீர்ப்புச் சங்கச் சட்டம்

### அறிவித்தல்

1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளத்தீர்ப்புச் சங்கச்சட்டத்தின் 28 ம் பிரிவின் பிரகாரம், தெங்குப் பொருள் உற்பத்தித் தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள் தொழில், வீடமைப்பு, சமூகசேவை மந்திரியால் அங்கீகரிக்கப்பட்டு விட்டனவென்று 1943 ம் ஆண்டின் 40 ம் இலக்க சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட அச்சட்டத்தின் 27 (3) ம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதியன்று நடைமுறைக்கு வரும்.

ஆர். எம். ஜி. மணிப்பெனி,
தொழில், வீடமைப்பு, சமூகசேவை
மந்திரிகாரியாலய நிரந்தரக்காரியதரிசி.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ந் தேதி.

### அட்டவணை

தெங்குப்பொருள் உற்பத்தித் தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்தால் ஆக்கப்பட்டு 1949 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 9,971 ம் இல. விசேட அரசாங்க கசெற்றில் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட 1950 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 17 ந் தேதி வெளிவந்த 10,073 ம் இல. விசேட அரசாங்க கசெற்றிலும், 1950 ம் ஆண்டு ஜூலை மாதம் 28 ந் தேதி வெளிவந்த 10,131 ம் இல. விசேட அரசாங்க கசெற்றிலும், 1951 ம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ந் தேதி வெளிவந்த 10,205 ம் இல. அரசாங்க கசெற்றிலும், 1951 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 10,229 ம் இல. விசேட அரசாங்க கசெற்றிலும், 1951 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 27 ந் தேதி வெளிவந்த 10,240 ம் இல. அரசாங்க கசெற்றிலும், 1953 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் தேதி வெளிவந்த 10,542 ம் இல. விசேட அரசாங்க கசெற்றிலும், 1957 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ந் தேதி வெளிவந்த 11,208 ம் இல. அரசாங்க கசெற்றிலும், 1958 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ந் தேதி வெளிவந்த 11,573 ம் இல. அரசாங்க கசெற்றிலும் பிரசுரமான அறிவித்தல்களிற் குறிக்கப்பட்டவாறு, மாற்றப்பட்ட தீர்மானங்கள் அவ்வட்டவணையின் 11 ம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் பாகத்தை இட்டு மேலும் மாற்றப்படுகின்றன :—

"II ம் பாகம்

சட்டத்தின் 6 ம் பிரிவின்படியுள்ள அறிவித்தலின் விவரிக்கப்பட்ட தெங்குப் பொருள் உற்பத்தித் தொழிலின் முயற்சிகளில் சில செய்கை முறைகளுக்குப் பொருத்தமான துண்டு வேலைக்கு தற்காலிகமாகவுள்ள கீழெல்லைச் சம்பள வீதங்கள்—

| செய்கை முறைகள் | வீதம் | |
|---|---|---|
| (1) காய்ந்த தேங்காய்ப்பூ உற்பத்தி செய்தல் சம்பந்தமாக— | | |
| | | ரூ. ச. |
| தேங்காய் உரித்தல் .. .. .. | 1,000 தேங்காய்களுக்கு .. .. | 2 19 |
| சிரட்டை அகற்றல் (கோடாலியால் உடைத்தல்) .. .. | 1,000 தேங்காய்களுக்கு .. .. | 1 13 |
| மேற்றோல் சீவுதல் .. .. .. | 1,000 தேங்காய்களுக்கு .. .. | 1 13 |
| தேங்காய்ப்பூவைக் கழுவுதலும், பிரித்தலும் .. .. | 1,000 றாத்தலுக்கு .. .. | 0 88 |
| காயவைத்தல் .. .. .. | 1,000 றாத்தலுக்கு .. .. | 1 31 |
| அரித்தலும், வகைப்படுத்தலும் .. .. | 1,000 றாத்தலுக்கு .. .. | 1 06 |
| அடைத்தலும், பெட்டிகளுக்கு அடையாளமிடுதலும் .. | 120 தொடக்கம் 130 றாத்தல்வரை நிறையுள்ள பெட்டி ஒவ்வொன்றுக்கும் 10 சதம் | |
| (2) குடிசைத் தொழிலாகவன்றி வேறு வகையில் தும்பு, கயிற்றுப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல் சம்பந்தமாக— | | |
| மட்டை அடித்தல் .. .. .. | அந்தருக்கு 94 சதம் (சிலிர்த்த தும்பின் ஈரநிறை) | |
| மட்டைகளைப் பிரித்தலும், சுத்தப் படுத்தலும் .. .. | அந்தருக்கு 94 சதம் (சிலிர்த்த தும்பின் ஈரநிறை) | |
| மெத்தைத் தும்பைச் சுத்தப்படுத்தலும் காயவைத்தலும் சிப்ப மாக்குதலும் .. .. .. | அந்தருக்கு 31 சதம் | |
| சிலிர்த்த தும்பைத் திரித்தலும், கட்டுதலும் .. .. | அந்தருக்கு 1 ரூபா 50 சதம் | |
| பாய்களும் பின்னற் பாய்களும் செய்தல்— | | |
| பாய்கள் .. .. .. | சதுர அடிக்கு 44 சதம் | |
| பின்னற் பாய்கள் .. .. .. | சதுர யாருக்கு 15 சதம் | |
| சிலிர்த்த தும்பைச் சிக்கு வாங்குதலும் கட்டுதலும் .. | அந்தருக்கு 3 ரூபா 25 சதம்" | |

## 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளத்தீர்ப்புச் சங்கச் சட்டம்

### அறிவித்தல்

1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளத் தீர்ப்புச் சங்கச்சட்டத்தின் 20 ம், 23 ம், 24 ம், 25 ம் பிரிவுகளின் பிரகாரம் பாண் தயாரிப்புத் தொழிற் சம்பளத் தீர்ப்புச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள், தொழில், வீடமைப்பு, சமூக சேவை மந்திரியால் அங்கீகரிக்கபட்டுவிட்டனவென்று 1943 ம் ஆண்டின் 40 ம் இல. சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட அச்சட்டத்தின் 27 (3) ம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாந் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

ஆர். எம். ஜி. மணிப்பெனி,
தொழில், வீடமைப்பு, சமூகசேவை
மந்திரிகாரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ந் திகதி.

### அட்டவணை

#### I ம் பாகம்

#### 20 (2) (*b*) ம் பிரிவின் பிரகாரம் கட்டளை

1. விசேட சகாயப்பணம் தொழில் அதிபராற் கணிக்கப்பட்டு, மாதமொருமுறை வெளியிடப்படும்.

2. விசேட சகாயப்பணம் எந்த மாதத்திற் கொடுக்கப்பட விருக்கிறதோ அதே மாதத்திற்கு நேரே முந்திய மாதத்தின் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை அடிப்படையாகக் கொண்டே அவ்விசேட சகாயப்பணம் கணிக்கப்பட வேண்டும்.

#### சம்பளம் கொடுக்க வேண்டிய தவணைகள் (23 (1) ம் பிரிவு)

3. சம்பளம் மாதம் ஒருமுறை மாதக்கடைசியிலிருந்து 10 நாட்களுக்குள் கொடுபட வேண்டும்.

#### சாதாரண வேலைநாள் என்பதன் சொற்பொருள் விளக்கம் (24 ம் பிரிவு)

4. வாரத்தில் எவ்வைந்து நாட்களுக்கும், அவ்வைந்து நாட்கள் முதலாளியும் தொழிலாளரும் சம்மதித்துக் கொண்ட நாட்களாகவிருப்பின், சாதாரண வேலை நாள் என்பது—

(அ) கீழே (ஆ) ம் உப பந்தியில் குறிக்கப்பட்டோரல்லாத இத்தொழிலின் ஏனைய தொழிலாளர் யாவர் விடயத்திலும் (சாப்பாட்டுக்கு 1 மணி நேரம் உட்பட) 9 மணிநேரத்தைக் கொண்டதாகும் ;

(ஆ) பின்வரும் தொழிலாளர் விடயத்தில் (சாப்பாட்டுக்கு அல்லது ஓய்வுக்கு 4 மணி நேரம் உட்பட) 12 மணிநேரத்தைக் கொண்டதாகும் :—

காரியத்தலைவர் (போர்மென்), மா பிசைவோர், அளப்போரும் நிறுப்போரும், பிரிப்போர், முறுக்குவோர், சுற்றிக்கட்டும் இயந்திர இயக்குநர், மா குவிப்போர், மா அரிப்போர், மேசை வேலையாளர், தட்டுக்கு எண்ணெய் பூசுவோர், தட்டு வேலையாளர், தட்டில் பாண் அடுக்குவோர், தட்டில் சீனியப்பம் அடுக்குவோர், பாண்சுடும் உதவியாளர், பாண் அடுப்பில் இடுவோர், தட்டு அடுக்குவோர், பாணும் சீனியப்பமும் அடுக்குவோர், கையால் சுற்றிக்கட்டுவோர், கட்டாக்குவோர், உதவியாளர்.

5. (4 ம் பந்தியிற் குறிக்கப்பட்ட 5 நாட்களில் எவற்றையுந்தவிர) யாதாயினுமொரு நாளுக்கு, அந்நாள் முதலாளியும் தொழிலாளரும் சம்மதித்துக் கொண்ட நாளாகவிருப்பின், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள சகல தொழிலாளரையும் பொறுத்தவரையில் (சாப்பாட்டுக்கு ஒரு மணி நேரம் உட்பட) 6 மணி நேரமாகும்.

#### II ம் பாகம்

1. நேரவேலைக்குரிய கீழெல்லைச் சம்பளவீதம் 6 ம் பந்தியிற் குறிக்கப்பட்டுள்ளவாறு ஒரு மூலவீதத்தையும், ஒரு விசேட சகாயப்பணத்தையும் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

2. இப்பாகத்திற் குறிக்கப்பட்ட எவ்வகுப்பையுஞ் சேர்ந்த ஒரு தொழிலாளர் கீழே I ம் பத்தியிற் குறிக்கப்பட்ட யாதாயினும் ஒரு மாதத்தில் கீழே II ம் பத்தியில் அம்மாதத்திற் கெதிரே குறிக்கப்பட்ட கீழெல்லைத் தொகை வேலைநாட்களுக்கு வேலை செய்திருப்பின், இப்பாகத்தில் அவ்வகுப்பு சம்பந்தமாக குறிக்கப்பட்ட கீழெல்லை மாதாந்தர வீதத்திற்குச் சமமான ஒரு தொகையே அவருக்கு அம்மாதச் சம்பளமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆயினும், ஐந்து ஞாயிற்றுக்கிழமைகளுள்ள யாதாயினுமொரு மாதம் சம்பந்தமாக மேற்கூறிய II ம் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள கீழெல்லைத் தொகை வேலை நாட்களில் ஒரு நாள் குறைக்கப்பட வேண்டும்.

வேலைக்குப் போகும் எத்தொழிலாளருக்கும் முதலாளி வேலை கொடுக்கத்தவறும் எந்நாளும் இப்பந்தியின் நோக்கங்களுக்காக தொழிலாளர் வேலை செய்த நாளாகக் கருதப்பட வேண்டும்.

| I ம் பத்தி<br>மாதம் | | | II ம் பத்தி<br>கீழெல்லைத் தொகை வேலைநாட்கள் |
|---|---|---|---|
| ஜனவரி | .. | .. | 27 |
| பெப்ருவரி | .. | .. | 24 |
| மார்ச் .. | .. | .. | 27 |
| ஏப்ரில் .. | .. | .. | 26 |
| மே .. | .. | .. | 27 |
| ஜூன் .. | .. | .. | 26 |
| ஜூலை .. | .. | .. | 27 |
| ஓகஸ்ற் | .. | .. | 27 |
| செப்றெம்பர் | .. | .. | 26 |
| ஒக்ரோபர் | .. | .. | 27 |
| நவெம்பர் | .. | .. | 26 |
| டிசெம்பர் | .. | .. | 27 |

3. ஒரு தொழிலாளர் ஒரு முழு மாதத்திற்கு வேலை செய்திராவிடின், அம்மாதத்திலுள்ள நாட்களின் தொகைக்கு வேலை செய்த நாட்களின் தொகை எவ்வித தகவுப்பொருத்தமுடைய தென்பதைக் கணித்து, கீழெல்லை மாதாந்தர வீதத்திற்கு அதேவிதத் தகவுப்பொருத்தமுடைய தொகையே அவருக்கு அம்மாதச் சம்பளமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

4. இப்பாகத்திற் குறிக்கப்பட்ட யாதாயினுமொரு வகுப்பைச் சேர்ந்த ஒரு தொழிலாளர் உத்தரவின்றி வேலைக்குவராமை, காரணமாக, 2 ம் பந்தியில் யாதாயினுமொரு மாதத்திற்கெதிரே குறிக்கப்பட்ட கீழெல்லைத் தொகை வேலைநாட்களுக்கு வேலை செய்திராவிடின், அத்தகைய கீழெல்லைத் தொகை வேலைநாட்களின் தொகைக்கும் உத்தரவின்றி வேலைக்குவராதிருந்த நாட்களின் தொகைக்குமிடையே யுள்ள வித்தியாசத்திற்கும் அத்தகைய கீழெல்லைத் தொகை வேலைநாட்களின் தொகைக்கும் எவ்வித தகவுப் பொருத்த மிருக்கிறதென்பதைக் கணித்து, இப்பாகத்தில் அவ்வகுப்பு சம்பந்தமாக குறிக்கப்பட்ட கீழெல்லை மாதாந்தர வீதத்திற்கு அதேவிதத் தகவுப் பொருத்தமுடைய தொகையே அவருக்கு அம்மாதச் சம்பளமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

5. விடுமுறை நாட்களில் அல்லது முழுச்சம்பளத்துடன் லீவு அனுமதிக்கப்படும் நாட்களில் வேலைக்குவராமை அனுமதியின்றி வேலைக்கு வராமையெனக் கருதப்படலாகாது.

6.

| 1 | 2 | 3 | | |
|---|---|---|---|---|
| தொழிலாளர் வகுப்பு | ஒரு மாதத்திற் குரிய மூலவீதம் | விசேட சகாயப்பண வீதம் | | |
| | | (அ) முந்திய மாதத் திற்குரிய வாழ்க் கைச் செலவுப் புள்ளி 100·1 ஆக்விருக்குமி டத்து விசேட சகாயப்பணம் | (ஆ) முந்திய மாதத்திற் குரிய வாழ்க்கைச் செலவுப் புள்ளி 100·0 ஆகவிருக்கு மிடத்து விசேட சகாயப்பணம் | (இ) முந்திய மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப் புள்ளி 100·1 க்குக் கூடுதலாக அல்லது 100.0 க்குக் குறைவாக விருக்குமிடத்து 100·1 க்குக் கூடுதலாக அல்லது 100·0 க்குக் குறைவாக விருக்கும் ஒவ்வொரு பூரண 1·8 புள்ளிகளுக்கும் (1·8 புள்ளிகளுக்குட்படின் கவனிக்கப்பட மாட்டா) கீழே முறைப்படி I ம், II ம் சூசிகளிற் காட்டப்பட்டவாறு பின்னுல் வரும் வீதங்களின் பிரகாரம் கணிக்கப்படும் ஒரு தொகையால் ஏற்றவாறு முற்போந்த 3 (அ) ம் பத்தியிற் கூறப்பட்ட விசேட சகாயப் பணவீதம் அதிகரிக்கப்படும் அல்லது முற்போந்த 3 (ஆ) ம் பத்தியிற் கூறப்பட்ட விசேட சகாயப் பண வீதம் குறைக்கப்படும் |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| **A வகுப்புத் தொழிலாளர் :** | | | | |
| காரியத்தலைவர் (போர்மென்), உணவு தயாரிப்போர், சிற்றுண்டிகள் தயாரிப்போர், மாப் பண்டம் தயாரிப்போர், கேக் அலங்கரிப்போர் .. | 70 00 .. | 55 00 .. | 53 55 .. | 1 45 |
| **B வகுப்புத் தொழிலாளர் :** | | | | |
| மா பிசைவோர், அளப்போரும் நிறுப்போரும், பிரிப்போர், முறுக்குவோர், மாத்தோய்ந்த பணியார (pie) வேலையாளர், மாப்பண்ட வேலையாளர், மாத்தோய்ந்த பணியார இயந்திர இயக்குநர், பொரிப்போர், வெண்ணெயும் சீனியும்கலப்போர், சீனியால் அலங்கரிப்போர், சுற்றிக்கட்டும் இயந்திர இயக்குநர் .. | 55 00 .. | 51 25 .. | 50 00 .. | 1 25 |
| **C வகுப்புத் தொழிலாளர் :** | | | | |
| மா குவிப்போர், மா அரிப்போர், சுருட்டு இயந்திர வேலையாளர், சீனி அரைப்போர், மேசை வேலையாளர், தட்டுக்கு எண்ணெய் பூசுவோர், தட்டு வேலையாளர், தட்டில் பாண் அடுக்குவோர், தட்டில் சீனியப்பம் அடுக்குவோர், தட்டில் கேக் அடுக்குவோர், பாண் வெட்டுவோர், காய்கறி, கனி சுத்தஞ் செய்வோர், பாலாடை (Cream) நிரப்புவோர், பாண்சுடும் உதவியாளர், பாண் அடுப்பிலிடுவோர், தட்டு அடுக்குவோர், பாணும் சீனியப்பமும் அடுக்குவோர், கேக் அடுக்குவோர், வெட்டுவோர், கருகியவற்றைச் சுரண்டி எடுப்போர், கையாற் சுற்றிக் கட்டுவோர், கட்டாக்குவோர், பொது உதவியாளர், விநியோகிப்போர் .. .. | 39 00 .. | 39 91 .. | 39 10 .. | 0 81 |

**மேலே 3 ம் பத்தியிற் கூறப்பட்ட கட்டளைகளை இயைபுபடுத்திக்காட்டும் சூசிகள்**

**I ம் சூசி—வாழ்க்கைச் செலவுப்புள்ளி அதிகரிப்பின் கொடுபடவேண்டிய விசேட சகாயப்பணம்**

| வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் | A வகுப்பு ரூ. ச. | B வகுப்பு ரூ. ச. | C வகுப்பு ரூ. ச. |
|---|---|---|---|
| 100·1—101·8 .. | 55 00 .. | 51 25 .. | 39 91 |
| 101·9—103·6 .. | 56 45 .. | 52 50 .. | 40 72 |
| 103·7—105·4 .. | 57 90 .. | 53 75 .. | 41 53 |
| 105·5—107·2 .. | 59 35 .. | 55 00 .. | 42 34 |
| 107·3—109·0 .. | 60 80 .. | 56 25 .. | 43 15 |

II ம் சூசி—வாழ்க்கைச் செலவுப்புள்ளி குறையின் கொடுபட வேண்டிய விசேட சகாயப்பணம்

| வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் | A வகுப்பு ரூ. ச. | B வகுப்பு ரூ. ச. | C வகுப்பு ரூ. ச. |
|---|---|---|---|
| 100·0—98·3 .. | 53 55 | 50 00 | 39 10 |
| 98·2—96·5 .. | 52 10 | 48 75 | 38 29 |
| 96·4—94·7 .. | 50 65 | 47 50 | 37 48 |
| 94·6—92·9 .. | 49 20 | 46 25 | 36 67 |
| 92·8—91·1 .. | 47 75 | 45 00 | 35 86 |

III ம் பாகம்

மேலதிக நேரச் சம்பள வீதம்

1. I ம் பாகத்தின் 4 ம் பந்தியில் குறிக்கப்பட்ட வாரத்தின் 5 நாட்களில் யாதாயினுமொருநாளில், சாதாரண வேலைநாளுக்குரிய வேலை மணித்தியாலங்களுக்கு மேலதிகமாகச் செய்யும் ஒவ்வொரு மணிநேர வேலைக்குமுரிய கீழெல்லை மேலதிக நேரச் சம்பள வீதம், கீழெல்லை மணித்தியால வீதத்தை (அதாவது, கீழெல்லை மாதாந்தர வீதத்தை 200 ஆல் பிரிக்க வரும் தொகையை) 50 சதவீதம் அதிகரிக்கவரும் தொகையாகும்.

2. I ம் பாகத்தின் 5 ம் பந்தியிற் குறிக்கப்பட்ட வாரத்து நாளில், சாதாரண வேலைநாளுக்குரிய வேலை மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக செய்யும் ஒவ்வொரு மணிநேர வேலைக்குமுரிய கீழெல்லை மேலதிக நேரச் சம்பளவீதம் கீழெல்லை மணித்தியாலவீதத்தை (அதாவது, கீழெல்லை மாதாந்தர வீதத்தை 200 ஆல் பிரிக்க வரும் தொகையை) 75 சதவீதம் அதிகரிக்க வரும் தொகையாகும்.

IV ம் பாகம்

வாராந்தர விடுமுறைநாட்கள் (24 ம் பிரிவு)

1. ஒவ்வொரு முதலாளியும் தம்மிடம் வேலைபார்க்கும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் வாரத்தில் ஒரு நாளை வாராந்தர விடுமுறைநாளாகக் கொடுக்கவேண்டும். அத்தகைய விடுமுறைநாள் குறித்த முதலாளியும் தொழிலாளரும் சம்மதித்துக்கொண்ட நாளாக விருத்தல் வேண்டும் ;

ஆயினும், ஒரு முதலாளி பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக, அத்தகைய வாராந்தர விடுமுறை நாளில் எத்தொழிலாளருக்கும் வேலை கொடுக்கலாம் :—

(அ) சம்பளத்தீர்ப்புச் சங்கத்தால் செய்யப்படும் எத்தீர்மானத்தின் ஏற்பாடுகளின்படியும் அல்லது சம்பளத்தீர்ப்புச் சங்கச் சட்டத்தின் படியும் அல்லது மற்றும் எச்சட்டத்தின்படியும் அல்லது அவரது சேவை ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படியும், குறித்த தொழிலாளருக்கு உரித்தான எவ்விடுமுறையோடும் அல்லது விடுப்போடும் (leave) அல்லது வேலைக்கு வாராதிருக்க உரித்தான நாளோடும், அத்தகைய வாராந்தர விடுமுறை நாளுக்கு நேரடுத்துவரும் 6 நாட்களுள் ஒருநாள் அத்தொழிலாளருக்கு விடுமுறை நாளாகக் கொடுக்கப்பட வேண்டும்.

(ஆ) அத்தகைய வாராந்தர விடுமுறைநாளில் செய்யும் வேலை சம்பந்தமாக அத்தொழிலாளருக்கு, மாதாந்தர வீதப்படி கொடுக்கப்படும் சம்பளத்தோடு கீழெல்லை மாதாந்தர வீதத்தின் 1/25 பங்குக்குக் குறையாத வேதனமும் கொடுக்கப்பட வேண்டும்.

(இ) I ம் பாகத்தின் 4 ம் பந்தியின் கீழ் ஒரு சாதாரண வேலை நாளுக்குரிய மணித்தியாலங்களின் தொகைக்கு மேலதிகமாக ஒரு வாராந்தர விடுமுறை நாளில் செய்யும் ஒவ்வொரு மணிநேர வேலைக்கும், கொடுக்கப்படவேண்டிய கீழெல்லை மேலதிகநேரச் சம்பளவீதம், கீழெல்லை மாதாந்தர வீதத்தை 200 ஆற் பிரிக்கவரும் கீழெல்லை மணித்தியால வீதத்தின் 2½ மடங்குக்குச் சமமான தொகையாகும்.

(ஈ) ஒரு தொழிலாளர் யாதாயினும் ஒரு மாதத்தில் வாராந்தர விடுமுறை நாளில் செய்யும் வேலைக்குரிய வேதனம் அம்மாதத்துக்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளத்தோடு சேர்த்துக் கொடுக்கப்பட வேண்டும்.

V ம் பாகம்

ஆண்டு விடுமுறைகள் (25 ம் பிரிவு)

1. ஒரு தொழிலாளர் எவ்வாண்டிலாவது ஒரே முதலாளியின் கீழ் 218 நாட்களுக்கு மேற்பட வேலை செய்திருப்பின் 218 நாட்களுக்கு மேற்பட வேலைசெய்த ஒவ்வொரு பூரண 5 நாட்களுக்கும் ஒரு நாள் வீதம் கணக்கிட்டு, குறித்த தொழிலாளருக்கு விடுமுறை நாள் அல்லது விடுமுறை நாட்கள் அடுத்து வருமாண்டில் கொடுக்கப்பட வேண்டும்.

ஆயினும், ஒரு முதலாளி 288 நாட்களுக்கு மேற்படவுள்ள எக்காலத்திற்கும் அத்தகைய விடுமுறையெதுவும் கொடுக்கவேண்டுமென்ற நியதியில்லை.

2. ஒரு தொழிலாளர் 6 க்கு மேற்பட்ட விடுமுறை நாட்களுக்கு உரித்துடையராயின், அவருக்கு அவ்விடுமுறை நாட்களில் 6 நாட்கள் தொடர்ச்சியான நாட்களில் கொடுக்கப்பட வேண்டும். அவர் அவ்விடுமுறை நாட்களைத் தொடர்ச்சியாக எடுக்க வேண்டும்.

3. 2 ம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக ஒரு தொழிலாளரும் அவரது முதலாளியும் சம்மதித்துக் கொண்ட நாளில் அல்லது நாட்களில் அத்தொழிலாளருக்கு விடுமுறை அல்லது விடுமுறைகள் கொடுபடவேண்டும்.

4. ஒரு தொழிலாளர் தமது வேலையிலிருந்து தாமாக விலகவிரும்பின் அல்லது வேலையிலிருந்து நிறுத்தப்பட விருப்பின் அல்லது விலக்கப்பட விருப்பின் அவ்விதம் தாமாக விலகுதற்கு, நிறுத்தப்படுதற்கு அல்லது விலக்கப்படுதற்கு நேரடுத்து முந்திய காலத்தில் பின்வரும் விடுமுறை நாட்களை யெடுக்க அவருக்கு உரித்துண்டு. அவர் அவ்விதம் அவ்விடுமுறை நாட்களை எடுத்தல் வேண்டும்—

(அ) அவருக்கு, முந்திய ஆண்டில் உரித்துள்ளதும், அவர் ஏற்கெனவே எடுக்காததுமான ஒவ்வொரு விடுமுறை நாளையும் ;

(ஆ) 1 ம் பந்தியிற் குறிக்கப்பட்ட வேலைகொடுத்தலும் வேலையும் தொடர்பாய ஏற்பாடுகளுக்கமைந்து அத்தொழிலாளர் நடப்பு ஆண்டில் ஒழுகியிருப்பின், அவரது வேலை தீர்ந்தாலன்றி, நேரடுத்துவரும் ஆண்டில் அவருக்குரித்தான ஒவ்வொரு விடுமுறை நாளையும் ;

ஆயினும், அத்தகைய தொழிலாளர் எவ்வாண்டிலும் எடுக்கும் விடுமுறைநாட்களின் மொத்தத்தொகை 21 க்கு மேற்படலாகாது.

5. இப்பாகத்திற் குறிக்கப்பட்ட ஒவ்வொரு விடுமுறை நாளுக்குமுரிய சம்பளம், கீழெல்லை மாதாந்தர வீதத்தை 25 ஆற் பிரிக்கவரு கீழெல்லை நாளாந்தர வீதத்திற்குச் சமமான தொகையாகும்.

6. 1 ம் பந்தியின் நோக்கத்துக்காக, " தொழிலாளர் வேலை செய்த நாட்கள் " என்பது பின்வருவனவற்றையுள்ளடக்கும்.

(i) கவனிக்கப்படும் எவ்வாண்டிலும் முந்திய எக்காலத்தினும் 25 ம் பிரிவின் பிரகாரம் அத்தொழிலாளருக்கு முதலாளி கொடுத்த விடுமுறைநாள் ஒவ்வொன்றும் ;

(ii) முதலாளி அனுமதிக்கும் எக்காரணத்தின் பேரிலும் வேலைக்கு வராத நாள் ஒவ்வொன்றும் ;

(iii) தமது வேலை காரணமாகவும், தாம் வேலைசெய்து கொண்டிருக்கும் பொழுது ஏற்படும் ஒரு விபத்தின் காரணமாகவும் அத்தொழிலாளருக்கு நேரும் காயத்தின் பொருட்டு வேலைக்கு வராத நாள் ஒவ்வொன்றும் ;

(iv) (117 ம் அத்தியாயமாகிய) தொழிலாளர் நட்ட ஈட்டுச் சட்டத்தின் III ம் அட்டவணையிற் குறிக்கப்பட்ட தொழிலின் பயனாக ஏற்படும் யாதாயினுமொரு நோய் காரணமாக வேலைக்கு வராத நாள் ஒவ்வொன்றும் ;

(v) முதலாளி தொழிலாளருக்கு வேலை கொடுக்கத்தவறும் நாள் ஒவ்வொன்றும் ;

(vi) 30 நாட்களுக்கு மேல் நீடிக்காத சட்டவிரோதமற்ற வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பு காரணமாக வேலைக்கு வராத நாள் ஒவ்வொன்றும் ;

(vii) சம்பளத்தீர்ப்புச் சங்கச் சட்டம் அல்லாத எழுத்திலுள்ள மற்றும் எச்சட்டத்தின் ஏற்பாடுகளாலும் அல்லது அவ்வேற்பாடுகளின் படியும் ஒரு தொழிலாளருக்கு உரித்தான விடுமுறைநாள் ஒவ்வொன்றும் அல்லது வேலைக்கு வராதிருக்க உரித்தான விடுமுறை நாள் ஒவ்வொன்றும் ;

ஆனால், 24 ம் பிரிவின் பிரகாரம் வாராந்தர விடுமுறைநாளாக நிர்ணயிக்கப்பட்ட நாளையுட்படுத்தாது.

7. முற்போந்த தீர்மானங்கள் 1957 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் தேதிக்கு முற்பட்ட எக்காலத்து வேலைக்கும் பொருந்தாது.

**அரசாங்க விடுமுறை நாட்கள்**

8. ஒவ்வொரு முதலாளியும் தம்மிடம் வேலைபார்க்கும் சகல தொழிலாளருக்கும் பின்வரும் அரசாங்க விடுமுறைகளை, விடுமுறைச் சட்டத்தின் கருத்துக்கமைய, அனுமதித்தல் வேண்டும் :—

(1) தைப்பொங்கல் தினம் ;

(2) சுதந்திர ஞாபகார்த்த தினம் (பெப்ருவரி மாதம் 4 ந் தேதி) ;

(3) சிங்கள, தமிழ் புத்தாண்டு தினம் ;

(4) மே தினம் ;

(5) சிங்கள விசாகமாதத்தின் பௌர்ணமி தினம் ;

(6) றம்ழான் பண்டிகையின் கண்டசித்தினத்துக்கு அடுத்தநாள் ;

(7) கிறிஸ்மஸ் தினம்.

ஆயினும், பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக ஒரு முதலாளி எத்தொழிலாளருக்கும் அத்தகைய விடுமுறை நாளிலும் வேலை கொடுக்கலாம் :—

(அ) அத்தகைய தொழிலாளருக்கு, அத்தகைய அரசாங்க விடுமுறை நாளில், சாதாரண வேலைநாள் கொண்ட மணித்தியாலங்களின் தொகைக்கு மேலதிகமாக வேலை கொடுக்கப்படலாகாது.

(ஆ) அத்தகைய தொழிலாளருக்கு, அத்தகைய அரசாங்க விடுமுறை நாளுக்கு நேரடுத்து முந்திய நாளில் ஒரு விடுமுறை நாள் கொடுக்கப் படவேண்டும். அல்லது அவருக்கு மாதாந்தர வீதப்படி கொடுக்கப்படும் சம்பளத்தோடு கீழெல்லை மாதாந்தர வீதத்தில் 1/25 பங்குக்குக் குறையாத வேதனம் சேர்த்துக் கொடுக்கப்பட வேண்டும்.

(இ) அத்தகைய தொழிலாளர் அத்தகைய அரசாங்க விடுமுறை நாளுக்கு நேரடுத்து முந்தியநாளில் வேலை பார்க்குமிடத்து, அவருக்கு அந்நாளில் சாதாரண வேலைநாள் கொண்ட மணித்தியாலங்களின் தொகைக்கு மேலதிகமாக வேலை கொடுக்கப்படலாகாது.

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் : என். ஈ. 42. உப உணவுப்பொருட்கள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் உபவிலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு உபவிலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), ஆத்தர் கத்பர்ட் பர்தோலோமியுஸ் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ந் திகதியைக்கொண்ட 11,525 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமான பத்திரிகையில், 1958 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட என். ஈ. 39 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலை, சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை முதலியனவைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையின் 3 ம் பத்தியில் காணப்படும் விலைகளையும் 2 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாய்பற்றிய எனது விலைக்கட்டளையையும் இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், உடனடியாக விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருளை 1 ம் பத்தியில் குறிக்கப்பட்ட எல்லைகளுக்குள் இந்த விலைக்கு கூடுதலாக விற்கலாகாது ;

(3) 1958 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ந் திகதியைக்கொண்ட 11,525 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட உப உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட என். ஈ. 39 ம் இலக்க உணவு விலைக் கட்டளையின் 3 தொடக்கம் 10 ம் பத்திகள் இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள செத்தல் மிளகாயைப் பொறுத்து இக்கட்டளையுடன் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ந் திகதி, மு. ப. 11 மணிக்கு நுவரேலியாக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஏ. சி. பர்தோலோமியுஸ்,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

**அட்டவணை**

மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை

| பத்தி 1<br>எல்லை | | பத்தி 2<br>விபரம் | பத்தி 3<br>மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | நுவரேலியா நகரசபை பகுதி | | |
| 2. | கந்தபளை | | |
| 3. | நானுஓயா | | |
| 4. | ரம்படை டவுண் | | |
| 5. | சங்கிலிபாலம் | | |
| 6. | குடாஓயா | | |
| 7. | பூண்டலுஓயா | செத்தல் மிளகாய் .. | 90 20 |
| 8. | திஸ்பனேகோறளை | | |
| 9. | பல்லேபளே கோறளை | | |
| 10. | மொறபே | | |
| 11. | டிலிகுல்டிரி | | |
| 12. | டயகம | | |
| 13. | ஆக்ரப்பத்தன | | |
| 14. | மேதபனே கோறளை | | |
| 15. | ராகலை | செத்தல் மிளகாய் .. | 90 59 |
| 16. | உடுபுஸ்சல்லாவ | | |
| 17. | நெல்தண்டஹீன்ன | | |
| 18. | ஹராஸ்பத்த | செத்தல் மிளகாய் .. | 91 90 |
| 19. | வத்துமுள்ள | | |
| 20. | கும்பல்கமுவ | | |
| 21. | டிம்புள்ள | | |
| 22. | வட்டகொடை | | |
| 23. | தலவாக்கொல்லை | | |
| 24. | லிந்துல்ல | செத்தல் மிளகாய் .. | 89 15 |
| 25. | வலஹா | | |
| 26. | கொட்டகலை | | |

**அட்டவணை**

சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை

| பத்தி 1<br>எல்லை | | பத்தி 2<br>விபரம் | பத்தி 3<br>சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | நுவரேலியா நகரசபை பகுதி | | |
| 2. | நானுஓயா | | |
| 3. | கந்தபளை | | |
| 4. | ராகலை | | |
| 5. | உடுபுஸ்சல்லாவ | | |
| 6. | ரம்படை டவுண் | | |
| 7. | சங்கிலிபாலம் | | |
| 8. | குடாஓயா | | |
| 9. | பூன்டுலோயா | | |
| 10. | திஸ்பனே கோறளை | | |
| 11. | பல்லேபனே கோறளை | | |
| 12. | மொறபே | செத்தல் மிளகாய் .. | 0 89 |
| 13. | டிலிகுல்டிரி | | |
| 14. | டயகம | | |
| 15. | ஆக்ரபத்தன | | |
| 16. | மெதபனே கிராமப்பகுதி | | |
| 17. | டிம்புள்ள | | |
| 18. | வட்டகொடை | | |
| 19. | தலவாக்கொலை | | |
| 20. | லிந்துல்ல | | |
| 21. | வலஹா | | |
| 22. | கொட்டகலை | | |
| 23. | அம்பவெலை | | |
| 24. | நெல்தண்டஹீன்ன | | |
| 25. | ஹராஸ்பத்த | செத்தல் மிளகாய் .. | 0 92 |
| 26. | வத்துமுள்ள | | |
| 27. | கும்பல்கமுவ | | |
| 28. | ருபாஹா .. | செத்தல் மிளகாய் .. | 0 93 |

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.